



# நல்ல வழி நடத்துனர்!



**கோ**வையில், தமிழ்நாடு போக்குவரத்துக் கழக பஸ் கண்டக்டராகப் பணியாற்றும் மா.யோகநாதன் கொஞ்சம் வித்தியாச மானவர்! பணி நேரம் போக மற்ற நேரங்களில் சுற்றுச் சூழல், இயற்கை வளம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில், மாணவர்கள் மத்தியில் விழிப்பு உணர்வை ஏற்படுத்த, ஒன் மேன் ஆர்மியாகக் களம் இறங்கிச் செயல்பட்டு வருகிறார் இவர்.

வீட்டிலிருந்து பணிக்குக் கிளம்பும்போதே ஸ்லைடு புரொஜக்டர் ஒன்றையும் கையோடு எடுத்துச் செல்கிறார். 500-க்கும் மேற்பட்ட அரிய மூலிகைத் தாவரங்களின் புகைப்படங்கள் அடங்கிய ஸ்லைடுகள் இவரிடம் உள்ளன!

பணி நேரம் முடிந்த பிறகு சுற்றுப்பட்டு கிராமங்கள், பள்ளிகள், கல்லூரிகளுக்குச் சென்று, அந்த ஸ்லைடுகளைப் போட்டுக் காட்டி, அந்த மூலிகைகளின் சிறப்பை எடுத்துச் சொல்லி, அவை வேகமாக அழிந்து வருவதால் நமக்கு ஏற்படக் கூடிய நஷ்டங்களையும் விலாவாரியாக விளக்குகிறார்.



இதற்காகக் கட்டணம் என்று ஒரு பைசா கூட வசூலிப்பதில்லை யோகநாதன். சொந்தச் செலவில் ஒரு சேவையாகவே இதைச் செய்கிறார். லீவு நாட்களில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒப்புதலுடன், சுற்றுச் சூழலில் ஆர்வமுள்ள மாணவர்களைக் காட்டுப் பகுதிகளுக்கு அழைத்துப் போய், நேரடிப் பயிற்சி முகாம்களையும் நடத்துகிறார்.

கோவை, மேட்டுப்பாளையம், கோத்தகிரி, அதன் அருகிலுள்ள லாங்வுட் பகுதியைச் சேர்ந்த பள்ளி, கல்லூரி வளாகங்களில் 10,000-க்கும் மேற்பட்ட மரக் கன்றுகளைத் தனி மனிதராக நட்டுச் சாதனை படைத்துள்ளார் யோகநாதன்.

"இன்றைக்குச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பது மிகவும் சீர்கெட்டு, உலகம் முழுக்கவே மிகவும் அச்சுறுத்தும் விஷயமாக மாறி வருகிறது. நாளைய தலைமுறையான மாணவர்கள் மனதில் இதை அழுத்தமாகப் பதியவைத்தால்தான் வருங்காலம் தப்பிக்கும். இல்லாவிட்டால் சுத்தமான காற்று, குடிநீர், உயிர்ச் சத்துள்ள மண் என்று ஜீவாதார அடிப்படைகள் அனைத்துமே கேள்விக்குறியாகிவிடும். அந்த விஷயத்தில் மக்களுக்கு விழிப்பு உணர்வு ஏற்படுத்த, தனிமனிதனாக என்னால் என்ன முடியுமோ அந்த முயற்சிகளைச் செய்து வருகிறேன்" என்கிறார் யோகநாதன் அடக்கத்துடன்!

வருங்காலம் இவரை வாழ்த்த பூச்செண்டோடு காத்திருக்கிறது!

- ஆ.பாண்டி
படங்கள்: தி.விஜய்




C.G. ஜான்சன் M.Phil
(உளவியலாளர்)

## விடுதலை! விடுதலை! விடுதலை!

## திக்குவாய்

என்றும் வாய் பூட்டிலிருந்து குறைந்தது ஆறே நாட்களில் முழு விடுதலை

Get Rid of fear and Anxiety and be free of stammering

திக்குவாய் பயம், படபடப்பு தவறாக கற்றல், புதுநபர்கள், மேலதிகாரிகள், போன், குழு மாற்றவர்கள் அவர்களை கவனிக்கும் போது அதிகம் ஏற்படுகிறது. திக்குவாய் நாக்கு வறட்சி, நடுக்கம், இறுக்கமான சுவாசம், நெஞ்சு அடைப்பது போன்ற நிலை ஏற்படுத்தும்.

திக்குவாய் பயத்தின் பிரதிபலிப்பாகும் இதனை உளவியல் செயற்சிகிச்சை மூலம் குறைந்தது ஆறே நாட்களில் குறைந்த செலவில் பூரணமாக குணப்படுத்த இயலும். (மற்றும் அதீதபயம், மதுப்பழக்கம், தூக்கமில்லாமை, பாலியல் பிரச்சனைகள், மன அழுத்தம் மற்றும் உளவியல் சார்ந்த பிரச்சனைகளுக்கு புதிய நவீன உளவியல் செயற் சிகிச்சை)

## ருஷிமோ – திக்குவாய்

மற்றும் செயற் சிகிச்சை மையம்

245, 6-வது வீதி, கிராஸ்கட், காந்திபுரம், கோயம்முத்தூர்-641 012. தமிழ்நாடு.
PH: Off: 0422-2491402 Res: 0422- 2536124 Cell: 98941 54201
E-mail: cgjohns2000@yahoo.com. Web: www.rusimo-psychologist.com